Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.



| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 273 | உள்ளூர் - 01.10.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 273 | வெளியூர் - 02.10.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



**கண் திருஷ்டிக்கு பரிகாரம்?** | **கனரா வங்கியில் 3,500 வேலைகள்!** | **வ.கி. பருவமழை அக்.15–ல்!** | **ஜல்லி, எம்-சாண்ட் ஏற்ற தடை!**

## கட்டணமில்லா வெற்றிப்பயணம் தொடக்கம்!

சென்னை, அக். 01–

வெற்றிப்பயண திட்டம் அக். 2 முதல் அமலுக்கு வருகிறது என்று முதல்–அமைச்சர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் முதல்–அமைச்சர் விஜய் பதவியேற்ற பின்னர், மகளிர் பயனடையும் வகையிலான வெற்றிப்ப யணம் என்ற பெயரிலான திட்டம் அக்டோபர் 2–ந்தேதி முதல் செயல்படுத்த ப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதுபற்றி ஆகஸ்டு 24–ந்தேதி அன்று சட்டமன்றப்பேரவையில் விதி எண் 110–ன் கீழ் முதல்–அமைச்சர் விஜய் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாட்டின் எந்த பகுதியிலும் வசிக்கும் மகளிரும் போக்குவரத்து கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக்கூடாது என்ற சமூகநீதி சிந்தனையை இவ்வரசு முதன்மையாக கொண்டுள்ளது என்றும், இதனை கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, 'வெற்றிப்ப யணம்' என்ற பெயரில், தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2–ந்தேதி முதல் செயல்படு த்தப்படும் என்றும் அறிவித்தார்.

தற்போது, 7 அரசு போக்குவரத்துக்க ழகங்களின் நகர சாதாரண பேருந்துகள் மற்றும் 40 கி.மீ. வரையிலான மலைப்பகுதி சாதாரண பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணம் செய்து வருகின்றனர். "வெற்றிப்பயணம்" திட்டத்தின் மூலம் இச்சேவை மாநகர, நகர்ப்பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ் (Express), எல்.எஸ்.எஸ். (LSS), டீலக்ஸ் (Deluxe) அரசுப்பேருந்துகள், புறநகர் சாதாரண பேருந்துகள் (Mofussil Ordinary) மற்றும் 40 கி.மீ.க்கு மேற்பட்ட மலைப்பகுதி சாதாரண பேருந்துகள் (Ghat Ordinary) ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டு, மொத்தமாக 12,692 பேருந்துகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படவுள்ளன.



இதன்மூலம், 7 அரசு போக்குவரத்து கழகங்களால் இயக்கப்படும் மொத்தம் 18,413 திட்டமிடப்பட்ட பேருந்துகளில் 12,692 பேருந்துகள் (69 விழுக்காடு), மொத்த 1,94,649 நடைகளில் (Singles) 1,65,312 நடைகள் (85 விழுக்காடு) இயக்கப்படும். நாளொன்றுக்கு சுமார் 84.32 லட்சம் மகளிர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள். மேலும், "வெற்றிப்பயணம்" பேருந்துகளின் மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்களுடனான (ETM) இணைப்பு பணி நிறைவடைந்துள்ளது. சோதனை மற்றும் சரிபார்ப்பு பணிகள் கடந்த 25–ந்தேதி அன்றும், சோதனை ஓட்டம் கடந்த 27–ந்தேதி அன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதும் தமிழக மகளிருக்கான எளிதில் அணுகக்கூடிய பொது போக்குவரத்து வசதி பெருமளவில் கிடைக்கும். மேலும், மாணவிகள் தொலைதூரத்தில் உள்ள கல்லூரிகளுக்கு செல்லவும், மகளிர் தங்கள் பணியிடங்களுக்கு செல்லவும், மருத்துவம் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கும் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க இயலும்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC) நடைமுறையில் உள்ளதால், செங்கல்பட்டுமற்றும்திருப்பூர்மாவட்டங்களுக்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC) விலக்கி கொள்ளப்பட்ட பிறகு இத்திட்டம் செயல்படுத்தப்படும். வெற்றிப்பயணம் திட்டத்தினை தமிழ்நாடு முதல்–அமைச்சர் அக்டோபர் 2–ந்தேதி தொடங்கி வைக்கவுள்ளார். இந்நிலையில், தமிழ்நாடு முதல்–அமைச்சர் விஜய் வெளியிட்ட சமூக ஊடக செய்தியில், மகளிர் கட்டணமில்லா பயண திட்டத்தினை விரிவுப்படுத்தி, பெருமளவில் பயனளி த்திடும் வகையில், வெற்றிப்ப யணம் என்ற பெயரில் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2–ந்தேதி முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, தமிழ்நாட்டின் மதிப்புமிகு மகளிரான நம் பாட்டி, அம்மா, அக்கா, தங்கைகள், பெண் குழந்தைகள் மற்றும் திருநர் அனைவருக்கும் கட்டணமில்லா வெற்றிப்பயணம் திட்டம் அக்டோபர் 2 முதல் செயல்பாட்டுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## பிரசார மேடையில் சத்தியபாமாவிடம் கூறியது என்ன? ராஜ்மோகன் விளக்கம்!

சென்னை, அக். 01–

தாராபுரத்தில் தவெக வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல்வர் ஜோசப் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டார். பிரசார மேடையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன், சுகாதாரத் துறை அமைச்சர் அருண் ராஜ் ஆகியோரும் பங்கேற்றுப் பேசினர்.



இதனைத் தொடர்ந்து தாராபுரம் தவெக வேட்பாளர் சத்தியபாமா பேசினார். அவர் பேசிக்கொண்டு இருக்கும்போது அமைச்சர் ராஜ்மோகனுக்கு தொலைபேசியில் அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்றுப் பேசியதும் சத்தியபாமாவின் காதோரம் வந்து அவர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து அதிமுகவில் இருந்து வெளியேறிய பிறகு சமூக வலைதளப் பக்கங்களில் தன்னை அவதூறாகப் பலர் பேசுவதாகக் கூறி கண்கலங்கினார். 2 மாதங்களாக செல்போன் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டதாகவும், சமூகவலைதள விமர்சனங்களால் கடும் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு கண்கலங்கினார்.

அருகில் இருந்த முதல்வர் விஜய், சத்தியபாமாவுக்கு ஆறுதல் கூறும் வகையில் அவரின் தோள்களைப் பற்றிக்கொண்டு ஆசுவாசப்படுத்தினார். இந்நிலையில், செல்போன் அழைப்பைத் தொடர்ந்து சத்திபாமாவின் காதுகளில் ராஜ்மோகன் பேசிய பிறகே சத்தியபாமா அழுததாக சமூக வலைதளங்களில் பலர் விமர்சனங்களை முன்வைத்தனர்.

இந்நிலையில் இது குறித்து அமைச்சர் ராஜ்மோகன் விளக்கம் அளித்துள்ளார். மக்கள் வெகு நேரமாக காத்துக்கொண்டிருப்ப தால் உரையை விரைந்து முடிக்குமாறு சத்தியபாமாவிடம் கேட்டுக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பெண்ணின் கண்ணீரை அரசியல் காரணத்துக்காக தவறாக சித்திரிக்க வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஆசிரியர் சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட உயர்நீதிமன்றம் அனுமதி!

சென்னை, அக். 01–

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், கடந்த ஜூலை மாதம் சிறப்பு தகுதித் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தியது. தங்களின் ஒவ்வொரு ஆண்டு அனுபவத்துக்கும் ஒரு கருணை மதிப்பெண் வழங்கும்படி ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு உத்தரவிடக் கோரி தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பி. நடராஜன், என். செல்வன் உள்ளிட்ட பலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.



இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஆசிரியர்களுக்கு கருணை மதிப்பெண்கள் வழங்குவது தொடர்பாக கொள்கை முடிவு எடுக்க வேண்டியுள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்ற உயர்நீதிமன்றம், சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்கால தடை விதித்து, கடந்த ஜூலை மாதம் 8 ஆம் தேதி உத்தரவிட்டது.

மனுதாரர்கள் இடைக்கால கோரிக்கை ஏதும் வைக்காத நிலையில், ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதான வழக்கில் இறுதி விசாரணைக்கு தயாராக இருப்பதால், தேர்வு முடிவுகளை வெளியிட விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி மும்மினேனி சுதீர் குமார், அரசுத்தரப்பு கோரிக்கையை ஏற்று, ஆசிரியர்களுக்கான சிறப்புத் தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட விதிக்கப்பட்ட தடையை நீக்கியும், முடிவுகளை வெளியிட ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு அனுமதியளித்தும் உத்தரவிட்டார்.

மேலும், பணி அனுபவத்துக்கான ஒவ்வொரு ஆண்டுக்கும் தலா ஒரு கருணை மதிப்பெண் வழங்கக் கோரி ஆசிரியர்கள் தாக்கல் செய்த பிரதான வழக்கை அக்டோபர் 7 ஆம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளார்.

## நடுவானில் தாக்குதல்... ஆபத்தில் 180 உயிர்கள்!

# பேரழிவைத் தடுத்த கேப்டன்! காக்பிட்டில் நடந்தது என்ன?

### "ஒரு ஹீரோ!" —உலகத்தலைவர்கள் பெருமிதம்!!

வாஷிங்டன், அக். 01–

துபாயிலிருந்து டெல் அவிவ் நோக்கிச் சென்ற ஃப்ளைதுபாய் விமானத்தில், நடுவானில் ஏற்பட்ட காக்பிட் மோதல் பெரும் விபத்தாக மாறாமல் தடுக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கேப்டன் ஸ்மித் மச்சார், கத்திக்குத்துத் தாக்குதலில் காயமடைந்த நிலையிலும் செயல்பட்டு, விமானத்தில் இருந்த சுமார் 180 பயணிகள் மற்றும் பணியாளர்களின் உயிரைக் காப்பாற்றியதாகக் கூறப்படுகிறது.



**காக்பிட் கதவுக்குள் என்ன நடந்தது?**

ஃப்ளைதுபாய் நிறுவனத்தின் FZ1073 விமானம், துபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலுள்ள பென் குரியன் விமான நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தது. போயிங் 737 மேக்ஸ் 8 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானத்தில் சுமார் 180 பேர் இருந்ததாகவும், அவர்களில் 27 குழந்தைகள் அடங்குவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், கேப்டன் ஸ்மித் மச்சாருக்கும் ஓமன் நாட்டைச் சேர்ந்த துணை விமானிக்கும் இடையே காக்பிட் பகுதியில் மோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

அப்போது கேப்டன் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், விமானத்தின் கட்டுப்பாட்டைப் பாதிக்கும் வகையில் துணை விமானி செயல்பட்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ள தாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமான நிறுவனம், கட்டுப்பாட்டு அறையில் மோதல் ஏற்பட்டதாக மட்டுமே அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பவத்தின் முழுக் காரணம் குறித்து விசாரணை நடைபெறுவதால், தாக்குதலின் நோக்கம் தொடர்பான இறுதி முடிவு அறிவிக்கப்படவில்லை.

**திடீர் உயர இழப்பு... அவசரச் சிக்னல்!**

காக்பிட் மோதலுக்குப் பின்னர், விமானம் சில நொடிகளில் 14,000 அடிக்கும் மேல் உயரத்தை இழந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. விமானத்திலிருந்து அவசரச் சிக்னல்களுடன், சட்டவிரோதத் தலையீடு அல்லது கடத்தல் சூழ்நிலையைக் குறிக்கும் 7500 குறியீடும் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கேப்டன் ஸ்மித் மச்சாரும், விமானத்தில் பயணம் செய்த பணியில் இல்லாத ஃப்ளைதுபாய் ஊழியர்களும் இணைந்து காக்பிட் நிலைமையைக் கட்டுப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த நிலையிலும் கேப்டன் போராடி காக்பிட் கதவைத் திறக்கச் செய்ததாகவும், அதன் பின்னர் பயணிகளும் விமானப் பணியாளர்களும் தாக்குதல் நடத்தியவரைக் கட்டுப்படுத்த உதவியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**தபூக்கில் அவசரத் தரையிறக்கம்**

நிலைமை கட்டுக்குள் வந்த பின்னர், விமானம் தனது வழித்தடத்தை மாற்றி சவுதி அரேபியாவின் தபூக் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியதாக ஃப்ளைதுபாய் நிறுவனம் தெரிவித்துள்ளதாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தரையிறங்கியதும் கேப்டன் ஸ்மித் மச்சாரும் துணை விமானியும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும், பின்னர் மாற்று விமானம் மூலம் டெல் அவிவ் நகருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**"அசாதாரண துணிச்சல்" — பாராட்டியதாகத் தகவல்**

கேப்டன் ஸ்மித் மச்சாரின் துணிச்சலை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாராட்டியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. காயமடைந்த நிலையிலும் தாக்குதலை எதிர்த்து, காக்பிட் கட்டுப்பாட்டை மீட்டெடுக்க உதவியதன் மூலம் மிகப்பெரிய விமான விபத்தை அவர் தடுத்ததாக நெதன்யாகு கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் ஸ்மித் மச்சாரை "ஹீரோ" எனக் குறிப்பிட்டுப் பாராட்டியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், இது திட்டமிட்ட விமானக் கடத்தல் முயற்சியா, விமானத்தை விபத்துக்குள்ளாக்கும் முயற்சியா அல்லது தனிப்பட்ட மோதலா என்பது அதிகாரப்பூர்வ விசாரணைக்குப் பின்னரே உறுதியாகும்.

**யார் இந்த ஸ்மித் மச்சார்?**

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கேப்டன் ஸ்மித் மச்சார், முன்பு ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தில் பணியாற்றியவர் என்றும், 2022ஆம் ஆண்டு ஃப்ளைதுபாய் நிறுவனத்தில் இணைந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருக்குப் பல ஆண்டுகள் விமானப் பறப்பு அனுபவம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

நடுவானில் விமானத்தின் கட்டுப்பாட்டைச் சுற்றி நடந்த சில நிமிட மோதல், நூற்றுக்கணக்கானோரின் உயிருக்கு மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தியதாகச் செய்தி விவரிக்கிறது. காயங்களையும் பொருட்படுத்தாமல் கேப்டன் எடுத்த நடவடிக்கைகளும், விமான ஊழியர்கள் மற்றும் பயணிகள் அளித்த உதவியும் பேரழிவைத் தடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**"இந்தியா பெருமை கொள்கிறது" — மோடி:**

மிகவும் ஆபத்தான சூழலில், காயங்களையும் பொருட்படுத்தாமல் மற்றவர்களின் உயிரைக் காக்க ஸ்மித் மச்சார் காட்டிய துணிச்சலையும் மனஉறுதியை யும் பிரதமர் மோடி பாராட்டியுள்ளார்.

அவரது வீரமிக்க செயல் பல உயிர்களைக் காப்பாற்றவும், பெரும் துயரத்தைத் தவிர்க்கவும் உதவியதாகக் குறிப்பிட்ட பிரதமர், அவர் விரைவில் குணமடையவும் நல்ல உடல்நலம் பெறவும்பி ரார்த்திப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவின் வடமேற்கில் உள்ள தபூக் நகரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்திய விமானி சுமித் மச்சார் உடல்நிலை சீராக இருக்கிறது; அவர் காயங்களில் இருந்து விரைவில் குணமடைவார் என சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

## வ.கி. பருவமழை அக்.15–ல்!

சென்னை, அக். 01–

தென் தமிழ்நாடு மற்றும் தென் கேரள பகுதிகளில் இயல்பான அளவை விட அதிகமாகவோ அல்லது இயல்பான அளவிலோ மழைக்கு வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

* தமிழ்நாட்டில் அக்.15 முதல் 21–ந்தேதிக்குள் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது.

* பருவமழை காலத்தில் தென் தீபகற்ப இந்தியாவில் சராசரியாக மழைப்பொழிவு இருக்கலாம்.

* தென் தமிழ்நாடு மற்றும் தென் கேரள பகுதிகளில் இயல்பான அளவை விட அதிகமாகவோ அல்லது இயல்பான அளவிலோ மழைக்கு வாய்ப்பு உள்ளது.

* நடப்பாண்டில் எல் நினோ காரணி வலுவாக உள்ளது. இது நவம்பர் இறுதி வரை வலுவாக நீடித்து படிப்படியாக குறையத் தொடங்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

வியாழக்கிழமை 01.10.2026

விசுவாவசு தமிழ் வருடம்

புரட்டாசி மாதம் 14-ம் தேதி

## பட்டாசுக்கு முழுத் தடையில்லை... நாள் முழுவதும் வெடிக்கவும் அனுமதியில்லை!



நாடு முழுவதும் பட்டாசுகளுக்கு முழுமையான தடை விதிக்கப்போவதில்லை என்றும், அதே நேரத்தில் நாள் முழுவதும் பட்டாசு வெடிக்க அனுமதிக்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது.

மத உணர்வுகளையும், காற்று மாசால் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் சமநிலையில் அணுக வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

**கொண்டாட்டத்துக்கும் கட்டுப்பாடு அவசியம்**

பட்டாசுகளால் ஏற்படும் சுகாதாரப் பாதிப்புகள் தொடர்பாக அர்ஜுன் கோபால் தொடர்ந்த வழக்கு, நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ், அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

தீபாவளிக் கொண்டாட்டங்கள் தசராவிலிருந்தே தொடங்குவதால், பட்டாசு வெடிப்பதற்குக் காலவரம்பை நிர்ணயிக்க முடியாது என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. கடந்த ஆண்டும் பட்டாசு வெடிப்பதற்கான நேரத்தை நீதிமன்றம் நிர்ணயித்திருந்ததை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

**மத்திய அரசு முன்வைத்த பரிந்துரை**

மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் ஐஸ்வர்யா பாட்டீ, அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் — சிஎஸ்ஐஆர்நீரி — தயாரித்த புதிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில், சரவெடிகள் மற்றும் பசுமைப் பட்டாசுகளைக் கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்கலாம் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, முழுத் தடை உணர்வுபூர்வமான பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், நாள் முழுவதும் வெடிப்பது முதியோர், நோயாளிகள், குழந்தைகளைப் பாதிக்கும் என்றும் நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் குறிப்பிட்டார். பட்டாசு வெடிக்கும் நேரத்தையும் அனுமதிக்கப்படும் வகைகளையும் நிர்ணயிப்பதே சரியான அணுகுமுறை என அவர் தெரிவித்தார்.

**சரவெடிகளுக்கு அளவு, எண்ணிக்கை கட்டுப்பாடுகள்**

சரவெடிகளின் அளவு, அவற்றில் இடம்பெறும் வெடிகளின் எண்ணிக்கை, வெடிக்கும் நேர இடைவெளி ஆகியவற்றுக்குக் கட்டுப்பாடுகள் விதித்து, புதிய தலைமுறை சரவெடிகளை உற்பத்தி செய்ய அனுமதிக்கலாம் என்ற மத்திய அரசின் பரிந்துரையை ஏற்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

**நான்கு நகரங்களில் சுற்றுச்சூழல் பரிசோதனை**

பேரியம் கலந்த இரண்டாம் தலைமுறை பசுமைப் பட்டாசுகளின் சுற்றுச்சூழல் தாக்கத்தை அறிய, டெல்லி, போபால், கொல்கத்தா, சென்னை ஆகிய நான்கு நகரங்களில் திறந்தவெளிப் பரிசோதனை நடத்த மத்திய அரசு அவகாசம் கோரியது. ஆய்வு முடிவுகளைச் சமர்ப்பிக்க அவகாசம் வழங்கிய நீதிபதிகள், வழக்கின் அடுத்த விசாரணையை அக்டோபர் 15ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

கொண்டாட்ட உணர்வுகளுடன், பொதுமக்களின் சுவாச ஆரோக்கியமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே விசாரணையில் நீதிமன்றம் வலியுறுத்திய கருத்து.

**மதுரை மணி**
**ஆசிரியர்**

## சேவைகள் இனி எளிதாகும்: 5 புதிய திட்டங்களை அறிவித்த ஆதார் ஆணையம்!




புதுடெல்லி, அக். 01–

ஆதார் என்பது இந்தியாவில் தவிர்க்க முடியாத அடையாள ஆவணமாக மாறியுள்ளது. பள்ளிகளில் குழந்தைகளை சேர்ப்பது முதல் நலத்திட்ட உதவிகள் பெறுவது வரை அரசின் பல்வேறு சேவைகளுக்கு ஆதார் கார்டே பிரதானமாக கேட்கப்படுகிறது. ஆதார் சேவைகளை மக்கள் எளிதாக பல்வேறு புதிய வசதிகளை ஆதார் ஆணையம் அறிமுகம் செய்து வருகிறது. அந்த வகையில் ஆதார் தொடர்பான சேவைகளை பொதுமக்கள் எளிதாகவும், விரைவாகவும் பெறும் வகையில், முக அடையாளம் மூலம் ஆதார் சரிபார்ப்பு உள்ளிட்ட 5 புதிய திட்டங்களை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) அறிமுகப்படுத்தி உள்ளது. கொல்கத்தாவில் நடைபெற்ற 17–வது ஆதார் தினத்தை முன்னிட்டு யுஐடிஏஐ சார்பில் 'ஆதார் சம்வாத்' நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், ஆதார் சேவைகளை மேலும் எளிமைப்படுத்தும் நோக்கில் பல்வேறு புதிய வசதிகள் குறித்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

இ–பிடிஎஸ். எனப்படும் மின்னணு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ரேஷன் உள்ளிட்ட சேவைகளைப் பெறுவோர், இனி விரல் ரேகைக்கு பதிலாக முக அடையாளத்தைப் பயன்படுத்தி ஆதார் சரிபார்ப்பை மேற்கொள்ள முடியும்.

ஆதார் சரிபார்ப்பு சேவையைப் பயன்படுத்த விரும்பும் தனியார் நிறுவனங்கள் அதற்கான அனுமதியைப் பெறும் நடைமுறையை எளிதாக்கும் வகையில் 'ஸ்விக் போர்ட்டல் 2.0' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதார் தொடர்பான சேவைகளுக்காக யுஐடிஏஐ–யின் மாநில மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு பொதுமக்கள் நேரில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், அவர்களின் வருகையை நிர்வகிக்கும் வகையில் புதிய டோக்கன் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அலுவலகங்களில் பொதுமக்கள் காத்திருக்கும் நேரம் குறையும்.

குறைந்த எண்ணிக்கையிலான ஆதார் சரிபார்ப்புகள் மட்டுமே தேவைப்படும் அரசு மற்றும் தகுதி பெற்ற அரசு சாரா நிறுவனங்களுக்காக துணை தளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதார் தொடர்பான தகவல்கள் மற்றும் சேவைகளை பொதுமக்கள் எளிதாக அணுகும் வகையில், யுஐடிஏஐ இணையதளமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆதார் சேவைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் எளிதாகப் பெற முடியும்.

## தாராபுரம் தொகுதியில் மு.க.ஸ்டாலின் 'ரோடுஷோ': உதயநிதி ஸ்டாலின் பிரசாரம்!



சென்னை, அக். 01–

தாராபுரம் இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ நடத்துகிறார். காலை 10.30 மணிக்கு அமராவதி சிலையிலிருந்து தொடங்கும் இந்த பிரசாரத்தில் பொது மக்களை சந்திக்கி றார். மாலை 5.30 மணிக்கு பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேச உள்ளார். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அக். (2–ந்தேதி) இடைத்தேர்தல் நடைபெறும் தாராபுரம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்கிறார். இதற்காக அவர் கோவை புறப்பட்டுச் செல்கிறார். பின்னர் கோவையில் இருந்து கார் மூலம் தாராபுரம் செல்கிறார். அங்கு அவரை கட்சியின் முன்னணி நிர்வாகிகள் வரவேற்கிறார்கள். தாராபுரத்தில் உள்ள ஓட்டலில் மு.க.ஸ்டாலின் இன்று இரவு தங்குகிறார்.

நாளை காலை (வெள்ளிக் கிழமை) 10.30 மணிக்கு மு.க.ஸ்டாலின் காரில் ரோடு ஷோ சென்று பொது மக்களை சந்திக்கிறார். தாராபுரம் நகரத்தில் அமராவதி சிலையிலிருந்து 'ரோடு ஷோ' செல்லும் மு.க.ஸ்டாலின் பொள்ளாச்சி சாலை பெரிய கடை வீதி வழியாக பொது மக்களை சந்திக்கிறார். அவருக்கு வழிநெடுக உற்சாக வரவேற்பு கொடுக்க தி.மு.க.வினர் தயாராகி வருகின்றனர். அக். 2 மாலை 5.30 மணிக்கு தாராபுரத்தில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில் தி.மு.க.தலைவர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று பேசுகிறார்.

இந்த பொதுக்கூட்டத்தில் தோழமை கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டு பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த பிரசார கூட்டத்திற்கு பிறகு மறுநாள் 3–ந்தேதி மதுராந்தகம் சென்று அங்கு போட்டியிடும் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து பேசுகிறார். இதையொட்டி மு.க.ஸ்டாலினின் தேர்தல் பிரசார சுற்றுப்பயண ஏற்பாடுகள் விரிவாக செய்யப்பட்டு வருகிறது.

பின்னர் 3–ந்தேதி (சனிக்கிழமை) தி.மு.க. இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தாராபுரம் தொகுதியில் பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார். 3–ந்தேதி மாலை தாராபுரம் தொகுதி நொச்சிப்பாளையம், தளவாய் பட்டணம் தாராபுரம் பெரியார் சிலை, தாராபுரம் வடதாரை ஆகிய இடங்களில் திறந்த வேனில் பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார். தாராபுரம் தொகுதியில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று மாலை தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்கிறார். மூலனூர் கிழக்கு ஒன்றியம் நால்ரோடு அருகில் மாலை 5.45 மணிக்கு பிரசாரம் செய்கிறார். அதனை தொடர்ந்து மாலை 7.15 மணிக்கு கரையூர் பகுதியிலும், இரவு 8.15 மணிக்கு அலங்கியம் பகுதியிலும் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

## அ.தி.மு.க. கூடாரம் காலியாகி விடும்- முன்னாள் அமைச்சர் செம்மலை!



சேலம், அக். 01–

த.வெ.க.வில் இணைந்த செம்மலை சேலத்தில் பேட்டி கொடுத்தார். அப்போது அவர் கூறியதாவது:–

தமிழக வெற்றிக் கழகத்தில் நான் கால தாமதமாக சேர்ந்திருந்தாலும் ஏற்கனவே எடுத்த முடிவு தான். த.வெ.க. வெற்றி தலைவர் விஜய் ஒரு நல்ல மனிதர், தன்னலமற்ற தலைவர், தலைமைக்கான பண்புகள் நிறைந்த தலைவர். ஒவ்வொரு குடும்பத்திலும் தன்னையும் ஒரு உறுப்பினராக கருதும் அளவுக்கு தமிழக மக்களின் மனதில் இடம் பிடித்தவர். இயல்பான அவரது இந்த குணநலன்கள் என்னை கவர்ந்தன. அதைவிட இன்றைக்கும் அறிஞர் அண்ணா மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரை தனது வழிகாட்டு தலைவர்கள் என்று பிரகடனப்படுத்தினாரோ அன்றைக்கு அவரால் ஈர்க்கப்பட்டேன்.

நான் இருந்த அ.தி.மு.க.வில் இருந்து விலகியதற்கு காரணம் 2017 –க்கு பிறகு அந்த இயக்கத்திற்கு சரியான தலைமை அமையவில்லை. அது மட்டுமல்ல இன்றைக்கு அந்த கட்சி பழனிசாமிக்கு சொந்தமான லிமிடெட் கம்பெனி ஆகிவிட்டது. உழைப்பவர்களுக்கு அங்கு மரியாதை இல்லை. அதனால் தான் பலர் அந்த இயக்கத்தில் இருந்து வெளியேறிவிட்டனர். இருப்பவர்கள் சிலரும் தங்கள் உழைப்பு வீணாகிறதே என்ற மனநிலையில் இருந்து வருகின்றனர். அவர்களும் விரைவில் விலகி விடுவார்கள். அப்போது இந்த கூடாரம் காலியாகி விடும். குளம்வற்றிய பிறகு கொக்குக்கு என்ன வேலை என்ற நிலைதான் பழனிசாமி நிலையாக இருக்கும். புரட்சித் தலைவரின் உண்மையான தொண்டர்களுக்கு வெற்றி தலைவர் விஜய்யின் அணுகுமுறை, ஆட்சி முறை பிடித்திருக்கிறது. எனவே இனி எதிர்காலம் த.வெ.க. தலைவர் வெற்றி தலைவர் விஜய்யின் கையில் தான். அவர் சாதித்த மிகப்பெரிய சாதனையாக கருதுவது மக்கள் மனங்களை வென்றது. அரசியல் கட்சித் தலைவர்கள் சாதிக்க முடியாத அரசியல் பண பலமோ, ஜாதி, மதம் தாக்கங்களுக்குகெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தவர் விஜய். தமிழக முதல்வர் விஜய்யால் மட்டுமே ஆட்சி முறையில் ஊழலை ஒழிப்பேன், லஞ்சம் கட்டுப்படுத்துவேன், முறைகேடுகளை களைவேன் என்று தைரியமாக சொல்ல முடியும். மற்ற தலைவர்களால் இந்த வாக்குறுதி மக்களுக்கு அளிக்க முடியாது. இவைகள் தான் த.வெ.க வெற்றி தலைவர் விஜய் தலைமையை ஏற்றுக் கொண்டதற்கு காரணங்களாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

த.வெ.க.வில் இணைந்த செம்மலை கடந்த 1980, 1984–ம் ஆண்டுகளில் நடந்த சட்டமன்ற தேர்தலில் சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். அதன்பிறகு கடந்த 2001–ம் ஆண்டு ஓமலூர் தொகுதி எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்டு, சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சராக பதவி வகித்தார். 2009–ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சேலம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

## ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் பணியை புறக்கணித்து போராட்டம்!




சென்னை, அக். 01–

தூய்மை பணியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விருத்தாசலம் நகராட்சி அலுவலகம் முன்பு இன்று பணியை புறக்கணித்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உழைப்போர் உரிமை இயக்கம் ஏ.ஐ.சி.சி.டி.யு. சார்பில் விருத்தாசலம் நகராட்சியில் ஒப்பந்த தூய்மை பணியாளர்களாக பணிபுரியும் 113 பேர் கடந்த 14 வருடங்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு இ.எஸ்.ஐ. பிடித்தம் செய்த தொகையை வழங்கிட வேண்டும். இ.எஸ்.ஐ. அடையாள அட்டை வழங்க வேண்டும். ஊதிய உயர்வு வழங்க வேண்டும். அடிப்படை உபகரணங்கள் வழங்க வேண்டும். உணவுப்படி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விருத்தாசலம் நகராட்சி அலுவலகம் முன்பு இன்று காலை 6 மணி முதல் பணியை புறக்கணித்து மணிமுத்து தலைமையில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் ஏ.ஐ.சி.சி.டி.யு. மாவட்ட பொறுப்பாளர் ராஜசங்கர், சி.பி.எம்.எல். மாநிலக்குழு உறுப்பினர் தனவேல் கோரிக்கைகளை விளக்கி பேசினர். மனோகர், சிவப்பிரகாசம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவல் கிடைத்ததும் விரைந்து வந்த விருத்தாசலம் நகர்மன்ற தலைவர் டாக்டர் சங்கீதா முருகதாஸ், நகராட்சி ஆணையாளர் நாகராஜ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தனர். இதனை ஏற்ற தூய்மை பணியாளர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



## சினிமா துளிகள்..!

## மைசூரு சாமுண்டீஸ்வரி அம்மனை தரிசித்த ரஜினிகாந்த்!



நடிகர் ரஜினிகாந்த் மைசூருவில் அமைந்துள்ள சாமுண்டீஸ்வரி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை செய்து வழிபாடு நடத்தினார். பூஜை முடிந்து வெளியே வந்த ரஜினிகாந்த், திரண்டிருந்த ரசிகர்களை பார்த்து புன்னகைத்தபடியே கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

திரையுலகின் சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்தின் 171–வது படமாக 'தர்மன்' படம் தயாராகி வருகிறது. நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிக்கும் இந்த படத்தை அஸ்வத் மாரிமுத்து இயக்கி வருகிறார். இந்த படத்தின் 3–வது கட்டப்படப்பிடிப்பு தற்போது நடந்து வருகிறது. இந்த படப்பிடிப்பு மைசூருவில் கடந்த 4 நாட்களாக நடைபெற்று வருகிறது. இதற்காக மைசூருவில் உள்ள ஒரு ஓட்டலில் ரஜினிகாந்த் தங்கியுள்ளார். இந்தநிலையில் நேற்று காலை நடிகர் ரஜினிகாந்த் மைசூரு சாமுண்டி மலைக்கு சாமி தரிசனம் செய்வதற்காக ஓட்டலில் இருந்து காரில் புறப்பட்டு சென்றார்.

அங்கு கோவில் நிர்வாகம் சார்பில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் சாமுண்டீஸ்வரி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை செய்து வழிபாடு நடத்தினார். பூஜை முடிந்து வெளியே வந்த ரஜினிகாந்த், திரண்டிருந்த ரசிகர்களை பார்த்து புன்னகைத்தபடியே கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பின்னர் காரில் ஏறி புறப்பட்டு சென்றார்.



## கண் திருஷ்டிக்கு பரிகாரம்?



வீட்டில் தொடர்ந்து பிரச்சினைகள் வரும்போது, "கண் திருஷ்டியாக இருக்குமோ?" என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படுவதுண்டு. திருஷ்டி நீங்கவும், குடும்பத்தில் நிம்மதி நிலைக்கவும் தலைமுறைகளாகப் பின்பற்றப்படும் வழிபாட்டு முறைகள் என்னென்ன? தெரிந்துகொள்வோம்.

பிறரின் பொறாமை கலந்த பார்வை ஒருவரின் முன்னேற்றத்தையும் மனநிம்மதியையும் பாதிக்கலாம் என்பது ஒரு பாரம்பரிய நம்பிக்கை. ஜோதிட, ஆன்மிக மரபுகளில் இதற்காகப் பல பரிகாரங்கள் சொல்லப்படுகின்றன. இவை நம்பிக்கை சார்ந்த பழக்கங்கள்; நஷ்டம், நோய் அல்லது குடும்பப் பிரச்சினைகளுக்குக் கண் திருஷ்டியே காரணம் என்பதற்கான அறிவியல் ஆதாரம் இல்லை.

**1. கற்பூரம்கிராம்பு வழிபாடு**

மாலை நேரத்தில் கற்பூரத்துடன் கிராம்பு சேர்த்து ஆரத்தி காட்டும் வழக்கம் சில குடும்பங்களில் உள்ளது. இல்லத்தில் நல்ல சூழலும் மனஅமைதியும் நிலைக்க வேண்டும் என்ற வேண்டுதலுடன் இந்த வழிபாடு செய்யப்படுகிறது. தீபத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைத்து, புகை அதிகமாகாமல் கவனிப்பது அவசியம்.

**2. உப்புகடுகுமிளகாய் சுற்றுதல்**

கல் உப்பு, கடுகு, காய்ந்த மிளகாய் ஆகியவற்றைக் கொண்டு, சம்பந்தப்பட்ட நபரை வலமிருந்து இடமாக ஏழு முறை சுற்றுவது திருஷ்டி கழிக்கும் மரபாகப் பின்பற்றப்படுகிறது. பயன்படுத்திய பொருட்களைச் சாலையிலோ முச்சந்தியிலோ வீசாமல், முறையாகக் கழிவில் அகற்றுங்கள்.

**3. வாசலில் எலுமிச்சைபச்சை மிளகாய்**

எலுமிச்சம்பழத்தையும் பச்சை மிளகாயையும் கருப்பு நூலில் கோர்த்து வாசலில் தொங்கவிடுவது பரவலாகக் காணப்படும் வழக்கம். வெளிப்புறத் திருஷ்டியிலிருந்து இல்லத்தைப் பாதுகாக்கும் அடையாளமாக இதை நம்பிக்கையாளர்கள் கருதுகின்றனர். வாடிய பொருட்களை அகற்றி வாசலைச் சுத்தமாக வைத்திருங்கள்.

**4. உப்பு கலந்த நீரில் வீட்டைத் துடைத்தல்**

தரை துடைக்கும் நீரில் சிறிதளவு கல் உப்பைக் கலந்து வாரத்தில் இரண்டு முறை பயன்படுத்தும் பழக்கம் சிலரிடம் உள்ளது. இதை இல்லத் தூய்மைக்கான ஆன்மிகச் செயலாகக் கருதுகின்றனர். உங்கள் தரையின் தன்மைக்கு உப்பு ஏற்றதா என்பதை அறிந்து பயன்படுத்துங்கள்.

**5. ஹனுமன் சாலிசா பாராயணம்**

காலையிலும் மாலையிலும் ஹனுமன் சாலிசாவைப் பாராயணம் செய்வது அனுமன் வழிபாட்டில் இடம்பெறும் நடைமுறை. தைரியம், மனஉறுதி, குடும்ப நலன் ஆகியவற்றை வேண்டிப் பக்தர்கள் இதைப் பின்பற்றுகின்றனர்.

**6. திருஷ்டிப் பொட்டு**

நெற்றியிலோ காதுக்குப் பின்புறத்திலோ கருப்புப் பொட்டு வைப்பது பாரம்பரிய வழக்கங்களில் ஒன்று. இதைத் திருஷ்டியிலிருந்து காக்கும் அடையாளமாகக் கருதுகின்றனர். சருமத்திற்குப் பொருந்தாத மை அல்லது தெரியாத கலவைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

**7. புனிதத் தீர்த்தம் தெளித்தல்**

கங்கை தீர்த்தம் அல்லது வழிபாட்டில் பயன்படுத்தப்படும் புனித நீரை வீட்டின் மூலைகளில் தெளிப்பது ஆன்மிகத் தூய்மையின் அடையாளமாகப் பின்பற்றப்படுகிறது. இதனால் திருஷ்டி, வாஸ்து தோஷம் நீங்கும் என்பது நம்பிக்கை சார்ந்த கருத்தாகும்.

**8. பூஜையின்போது சங்கு முழங்குதல்**

சில வழிபாட்டு மரபுகளில் பூஜையின்போது சங்கு முழங்கப்படுகிறது. அதன் ஒலி மங்கலத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. எதிர்மறை சக்திகளை அழிக்கும் என்பது ஆன்மிக நம்பிக்கையே; நிரூபிக்கப்பட்ட விளைவு அல்ல.

**9. அந்திப் பொழுதில் தீப வழிபாடு**

மாலை அந்திப் பொழுதில் பூஜை அறையிலோ ஆலயத்திலோ நல்லெண்ணெய் அல்லது நெய் தீபம் ஏற்றி, குடும்ப நலனுக்காக வேண்டுவது பலரின் வழக்கம். தீபத்தை எளிதில் தீப்பற்றும் பொருட்களிலிருந்து விலக்கி வைத்து, கண்காணிப்புடன் வழிபடுங்கள்.

**நம்பிக்கையுடன் நடைமுறை அக்கறையும் தேவை**

வழிபாடு தனிப்பட்ட நம்பிக்கையின் ஒரு பகுதியாக இருக்கலாம். அதே நேரத்தில் குடும்பப் பிரச்சினைகளுக்குப் பேசித் தீர்வு காண்பதும், பண இழப்புகளுக்கான காரணங்களை ஆராய்வதும், உடல்நலப் பிரச்சினைகளுக்கு மருத்துவ உதவி பெறுவதும் முக்கியம். பரிகாரங்களால் உடனடிப் பலனோ முழுமையான பாதுகாப்போ கிடைக்கும் என்று உறுதி கூற முடியாது.



தேனி மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பட்டா மாறுதல் இலவச வீட்டு மனை பட்டா உள்ளபட 17 கோரிக்கை மனுக்களை பெற்று கொண்ட ஆட்சியர்.சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் வழங்கி குறிப்பிட காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.




# பல ஆண்டுகள் புகைப்பழக்கமா? இனியும் நுரையீரல் மீளுமா?



"இத்தனை ஆண்டுகள் புகைப்பிடித்துவிட்டேன்... இனி நிறுத்தி என்ன பயன்?" என்று நினைக்கிறீர்கள்? புகைப்பழக்கத்தை நிறுத்துவது எந்த நிலையிலும் பயனளிக்கும். ஆனால் பாதிக்கப்பட்ட நுரையீரல் முழுமையாக பழைய நிலைக்குத் திரும்புமா என்பது பாதிப்பின் தன்மையைப் பொறுத்தது.

பல ஆண்டுகளாகப் புகைப்பிடிப்பவர்களுக்கும், காற்று மாசு அதிகமுள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் நுரையீரல் ஆரோக்கியம் குறித்த கவலை இயல்பானது. இதில் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான செய்தி: பாதிப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இன்றே தொடங்கலாம்.

**புகை நின்றால்... உடலில் என்ன நடக்கும்?**

சிகரெட் புகையிலுள்ள ரசாயனங்கள் சுவாசக் குழாய்களில் எரிச்சலை ஏற்படுத்துகின்றன. சளியையும் வெளிப்புறத் துகள்களையும் வெளியேற்ற உதவும் நுரையீரலின் இயல்பான செயல்பாட்டையும் பாதிக்கின்றன.

புகைப்பிடிப்பதை நிறுத்திய பிறகு உடலில் மீட்பு செயல்முறைகள் தொடங்குகின்றன. காலப்போக்கில் இருமல், சளி, மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் குறையலாம். எவ்வளவு விரைவாக நிறுத்துகிறோமோ, அவ்வளவு விரைவாக தொடர்ந்து ஏற்படும் பாதிப்பைக் குறைக்க வாய்ப்பு கிடைக்கும்.

**முழுமையாகக் குணமாகுமா? உண்மை இதுதான்**

எல்லோருக்கும் முழுமையான மீட்பு சாத்தியமில்லை. நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் எனப்படும் COPD, குறிப்பாக நுரையீரலின் காற்றுப் பைகள் சேதமடையும் எம்ஃபிசீமா, ஏற்பட்டிருந்தால் சில பாதிப்புகள் நிரந்தரமாக இருக்கலாம்.

எனினும், "இனி நிறுத்துவதால் பயனில்லை" என்பது தவறு. COPD உள்ளவர்களுக்குக்கூட புகைப்பழக்கத்தை நிறுத்துவது நுரையீரல் செயல்பாடு மேலும் குறையும் வேகத்தைத் தணிக்க உதவும். மருத்துவ ஆதாரம்: CDC

**சிகரெட் மட்டுமல்ல... காற்று மாசும் கவனிக்க வேண்டியதே!**

மாசுத் துகள்களை நீண்டகாலம் சுவாசிப்பதும் சுவாசப் பாதையைப் பாதிக்கலாம். காற்றின் தரம் மோசமாக உள்ள நாட்களில் வெளியே செலவிடும் நேரத்தைக் குறைக்கவும். குறிப்பாக, வெளிப்புறத்தில் தீவிர உடற்பயிற்சியைத் தவிர்க்கவும் அல்லது அதன் நேரத்தையும் தீவிரத்தையும் குறைக்கவும்.

வெளியே செல்ல வேண்டிய சூழலில், முகத்தில் சரியாகப் பொருந்தும் N95 போன்ற துகள்களை வடிகட்டும் முகக்கவசம் உதவலாம். இது எல்லா வகையான மாசு வாயுக்களிலிருந்தும் பாதுகாப்பளிக்காது. வீட்டுக்குள் காற்றோட்டமும் அவசியம். அதே நேரத்தில் வெளிப்புற மாசு அதிகமாக இருக்கும்போது ஜன்னல்களைத் திறந்து மாசு உள்ளே அனுமதிப்பதைத் தவிர்க்க வேண்டும். வழிகாட்டல்: AirNow

**நடைப்பயிற்சி உதவுமா? நிச்சயமாக–உடல்நிலைக்கு ஏற்ப!**

நடைப்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் போன்ற மிதமான உடற்பயிற்சிகள் உடற்திறனை மேம்படுத்தவும், உடல் ஆக்சிஜனைத் திறம்பட பயன்படுத்தவும் உதவும். ஆனால் அவை நிரந்தர நுரையீரல் சேதத்தை முழுமையாகச் சரிசெய்யாது.

ஏற்கெனவே மூச்சுத்திணறல் அல்லது குறிப்பிடத்தக்க சுவாசப் பிரச்சினை இருந்தால், திடீரென கடுமையான பயிற்சியைத் தொடங்க வேண்டாம். உங்களுக்கு ஏற்ற பயிற்சி குறித்து மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

இந்த அறிகுறிகளைச் சாதாரணமாக நினைக்காதீர்கள்

தொடர்ந்து நீடிக்கும் இருமல், காரணமில்லாத மூச்சுத்திணறல், மார்பில் அசௌகரியம், மூச்சுவிடும்போது விசில் போன்ற சத்தம், அடிக்கடி ஏற்படும் சுவாசத் தொற்று—இவற்றைப் பழைய புகைப்பழக்கம் அல்லது மாசின் விளைவு என்று மட்டும் கருதி ஒதுக்கிவிடக் கூடாது.

அறிகுறிகள் தொடர்ந்தால் மருத்துவரை அணுக வேண்டும். மருத்துவ வரலாறு மற்றும் அறிகுறிகளின் அடிப்படையில், ஸ்பைரோமெட்ரி எனப்படும் நுரையீரல் செயல்பாட்டுப் பரிசோதனையை மருத்துவர் பரிந்துரைக்கலாம். தேவைக்கேற்ப மார்பு எக்ஸ்–ரே அல்லது பிற பரிசோதனைகளும் செய்யப்படலாம். மருத்துவ ஆதாரம்: NHLBI

**இன்றே தொடங்குங்கள்–சுவாச ஆரோக்கியத்துக்காக!**

புகைப்பழக்கத்தை நிறுத்துவது, மாசுக்கு ஆளாவதைக் குறைப்பது, உடல்நிலைக்கு ஏற்ற உடற்பயிற்சி செய்வது, நீடிக்கும் அறிகுறிகளுக்கு மருத்துவ ஆலோசனை பெறுவது ஆகியவை நுரையீரலைப் பாதுகாக்க உதவும்.

கடந்த ஆண்டுகளின் பாதிப்பை முழுவதும் மாற்ற முடியாமல் போகலாம். ஆனால் இனி ஏற்படும் பாதிப்பைக் குறைக்க இன்று எடுக்கும் முடிவு உதவும்.



இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை ஊராட்சி ஒன்றியம், திருவெற்றியூர் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ஆண்டுதோறும் சினிமா, சின்ன திரை விருதுகள்: ராஜ்மோகன் உறுதி!



சென்னை, அக். 01–

காலம் தாழ்த்தாமல் இனி ஆண்டுதோறும் சினிமா மற்றும் சின்ன திரை விருதுகள் வழங்கப்படும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் இன்று (அக். 1) தெரிவித்தார்.

சிவாஜி கணேசனின் பிறந்தநாளையொட்டி சென்னை அடையாறு மணி மண்டபத்தில் உள்ள அவரின் சிலைக்கு தமிழக அரசு சார்பில் மரியதை செலுத்தப்பட்டது. தமிழக அரசு சார்பில் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், அமைச்சர்கள் ராஜ்மோகன், வெங்கடரமணன் ஆகியோர் சிவாஜி கணேசன் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதுமட்டுமின்றி, இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வன்னி அரசு, நடிகர் பிரபு, நடிகர் நாசர், விக்ரம் பிரபு மற்றும் சிவாஜி கணேசன் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் செய்தியாளர்களுடன் அமைச்சர் ராஜ்மோகன் பேசியதாவது:

"தமிழக அரசு சார்பில் சிவாஜி கணேசனுக்கு மரியாதை செய்வது எங்கள் கடமை. அடுத்து நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்படும். நடிப்புதான் என் தெய்வம் எனக் கூறியவர் சிவாஜி கணேசன்.

இன்று 99வது பிறந்தநாள்; அடுத்து நூற்றாண்டு பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப்படும். நூற்றாண்டு விழா தொடர்பாக நடிகர் பிரபு அளித்துள்ள கோரிக்கைகளை தமிழக முதல்வருடன் ஆலோசித்து நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வெள்ளித் திரை, சின்ன திரை விருதுகள் இனி ஆண்டுதோறும் கொடுக்கப்படும். அவரின் பெயரில் விரைவில் விருதுகள் வழங்க ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்'' எனக் குறிப்பிட்டார்.

# மதவாத பாஜக, சாதியவாத பாமகவுடன் ஒருபோதும் கூட்டணி இல்லை! வன்னி அரசு!



சென்னை, அக். 01–

சாதியவாத பாமக, மதவாத பாஜகவுடன் ஒருபோதும் கூட்டணி இல்லை என்று அமைச்சர் வன்னி அரசு தெரிவித்தார். தமிழகத்தில் இடைத்தேர்தலுக்குப் பிறகு தவெக கூட்டணியில் பாமக இடம்பெறும் என்று பரவலாக செய்திகள் வருகின்றன. ஆனால் தவெகவுடன் பாமக கூட்டணி என்பது வதந்தி என்று பாமக எம்எல்ஏ சௌமியா அன்புமணியும் அதேபோல விசிக தலைவர் தொல். திருமாவளவனும் தெரிவித்திருந்தனர்.

எனினும், இந்த கூட்டணி தொடர்பாக முதல்வர் விஜய்யும் கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்களும் பேசி முடிவெடுப்பர்கள் என்று அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார். இதையடுத்து விசிக துணைப் பொதுச் செயலாளரும் அமைச்சருமான வன்னி அரசு இன்று செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில்,

"சாதியவாத பாமகவுடனும் மதவாத பாஜகவுடனும் ஒருபோதும் கூட்டணி இல்லை. இந்த நிலைப்பாட்டில் விசிக உறுதியாக இருக்கிறது. நாங்கள் இப்போதும் இந்த நிலைப்பாட்டையே தொடர்வோம். சௌமியா அன்புமணியும் இது வதந்தி என்று தெளிவுபடுத்தியுள்ளார்'' என்று கூறினார்.

# பொற்கிழி வழங்கும் விழா!





மதுரை, அக். 01–

மதுரை தமிழ் இசைச் சங்கத்தின் விழாவில் நல்லறிஞர் கி. வேலாயுதன் அவர்களுக்கு பொற்கிழி வழங்கப்பட்டது. மதுரை தமிழ் இசைச் சங்கத்தின் ஐம்பத்து இரண்டாம் ஆண்டு தமிழ் இசை விழா நேற்று மாலை ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முதுமுனைவர் இராம. கதிரேசன் சிறப்புரை ஆற்றி முனைவர் மு.தங்கராசு அவர்களுக்கு முத்தமிழ்ப் பேரறிஞர் பட்டமும் அதற்கான பொற்கிழியும் வழங்கினார்.

மற்றும் இலக்கண வித்தகர், தமிழ்த் தொண்டர், நல்லறிஞர், அன்னைத் தமிழுக்கு நாளும் அணி சேர்த்திடும் உணர்வாளர் புலவர் கி. வேலாயுதன் அவர்களுக்கு பொற்கிழி வழங்கினார். முன்னதாக மதுரை தமிழ் இசைச் சங்க தேவார இசைக் குழுவினின் தேவார இன்னிசை நடைபெற்றது. முத்தமிழ்ப் பேரறிஞர் அறிமுகம் மற்றும் வரவேற்புரை நிகழ்த்தினார் மூத்த அறங்காவலர் எஸ். மோகன் காந்தி. சிறப்பு விருந்தினர் இல்லத்தரசியார் சாந்தி கதிரேசன் குத்து விளக்கு ஏற்றினார். ஹாக்கி விளையாட்டு உபகரணம் வழங்கியும், வளரும் இசைக் கலைஞர்களுக்கு பரிசும் விருதும் வழங்கி சிறப்பித்தார் சிறப்பு விருந்தினர் முதுமுனைவர் இராம. கதிரேசன். அறங்காவலர் பி.இராமசாமி நன்றி கூறினார். மாநகர் மதுரையின் இலக்கிய நெஞ்சங்கள், தமிழறிஞர்கள், தொழிலதிபர்கள் என பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம், அலமேலு சொக்கலிங்கம், பட்டிமன்ற நடுவர் எஸ். ராஜா, தாம்பிராஸ் இல. அமுதன், சாந்திகுமார் சுவாமிகள், விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் சி ஐ ஒ எஸ். ஸ்ரீ குமார், வரதராஜன் தம்பதியர், சீனாஸ், விசாலாட்சி, அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர், பேராசிரியர் மு. அருணகிரி, மூத்த பத்திரிகையாளர் பா. திருமலை, தியாக தீபம் அ. பாலு, லெ. மு. மு. லெட்சுமணன், அங்கயற்கண்ணி லெட்சுமணன், வி டி கண்ணன், ஏஎல். சிதம்பரம், டாக்டர் ஒளவை மெய்கண்டன், ஆர்எம். ஏகப்பன், யுடிஎல் ராமசாமி, அகிரி ஆர்எம். லெட்சுமணன், அக்ரி ஏடி. பஞ்சநதம், கவிஞர் இரா. இரவி, பேராசிரியர் கண்ணன், ரேவதி சுப்புலட்சுமி என ஏராளமானோர் பங்கேற்று வாழ்த்தி மகிழ்ந்தனர். பொருளாளர் ஆர்எம். சோமசுந்தரம், அறங்காவலர்கள் டாக்டர் ஜி. கிருஷ்ணன், எஸ் எல் என் எஸ். பெரியணன், ஏ.ஆர். சேவுகன் செட்டி, மற்றும் ஏ.ஆர். ஆர். ராஜேந்திரன், ஏஆர். ஆர். வெங்கடாசலம், மூன் ஸ்டார் லேனா, வள்ளி அண்ணாமலை மற்றும் நிர்வாக குழுவினர், உறுப்பினர்கள், மன்ற மேலாளர் பழனியப்பன், வி. பாலு உள்ளிட்ட பணியாளர்கள் சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தனர். நிகழ்ச்சியை சூரியன் எப் எம் முதுநிலை கலைஞர் ஸ்டீபன் தொகுத்து வழங்கினார். ராணி லேடி மெய்யம்மை ஆச்சி தமிழ் இசைக் கல்லூரி ஆசிரியர்கள் இறைவணக்கம் பாடினர். சிறப்பான இரவு உணவு. நல்லறிஞர் கி. வேலாயுதன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# 15 சிறந்த கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்கும் விழா!



கரூர், அக். 01–

தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத்துறையின் மூலம் பாரம்பரிய கலைகள்பாதுகாத்து, அவற்றை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, கரூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் கலைப் பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்ட கலைஞர்களில், 18 வயதிற்குட்பட்ட 3 கலைஞர்களுக்கு கலை இளமணி விருதும், தலா ரூ.4,000 பரிசுத்தொகையும்; 19 முதல் 35 வயது வரையிலான 3 கலைஞர்களுக்கு கலை வளர்மணி விருதும், தலா ரூ.6,000 பரிசுத்தொகையும்; 36 முதல் 50 வயது வரையிலான 3 கலைஞர்களுக்கு கலைச்சுடர்மணி விருதும், தலா ரூ.10,000 பரிசுத்தொகையும்; 50 முதல் 65 வயது வரையிலான 3 கலைஞர்களுக்கு கலை நன்மணி விருதும், தலா ரூ.15,000 பரிசுத்தொகையும்; 65 வயதிற்கு மேற்பட்ட 3 கலைஞர்களுக்கு கலை முதுமணி விருதும், தலா ரூ.20,000 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. மொத்தம் 15 கலைஞர்களுக்கு விருதுகளையும், அதற்கான பரிசுத்தொகைகளையும் மாவட்ட ஆட்சியர் சி. முத்துக்குமரன், வழங்கினார்.

இதில் கலை பண்பாட்டுத்துறை உதவி இயக்குநர் (திருச்சி மண்டலம்) த. செந்தில்குமார், கரூர் அரசு இசைப்பள்ளி முதல்வர் ஆ.வி.செ. குருமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டிற்கு வருகிறது பிரமாண்ட மல்டிப்ளெக்ஸ் திரையரங்கம்: அதிகாரப்பூர்வ இணைப்பு!




ஈரோடு, அக். 01–

ஈரோடு மக்களுக்கும் மற்றும் கொங்கு மண்டல சினிமா ரசிகர்களுக்கும் நவீன உலக தரத்திலான திரை அனுபவத்தை வழங்கும் வகையில், ஈரோட்டின் முன்னணி வணிக வளாகமான 'Fortune City' மற்றும் தென்னிந்தியாவின் முன்னணி பிரீமியம் திரையரங்க நிறுவனமான 'Broadway Cinemas' இரண்டும் கைகோர்த்துள்ளன.

இதன் மூலம் ஈரோட்டில் இளம் தலைமுறையினருக்கு மல்டிப்ளெக்ஸ் தியேட்டர் வளாகம் அமைக்கப்பட உள்ளது. இந்த பிரமாண்ட திரையரங்க திட்டம் வரும் ஜனவரி 2028–க்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

**உலகத்தரத்திலான திரை தொழில்நுட்பம்:**

2023–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'Broadway Cinemas', கோவை மற்றும் திருப்பூரில் அதிநவீன திரையரங்குகளை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. கோவையில் தென்னிந்தியாவின் முதல் 'IMAX Laser', தமிழ்நாட்டின் முதல் 'EPIQ Premium Large Format' மற்றும் 'Luxury Gold Screen' வசதிகளுடனும், திருப்பூரில் 'HyperX', 'Vivid' திரைகளுடனும் இயங்கி வருகிறது. உயர்தர ஒலி–ஒளி தொழில்நுட்பம், பிரமாண்டமான திரைகள், சொகுசு இருக்கைகள் மற்றும் சிறப்பான உணவு அனுபவங்களுடன் கூடிய மல்டிப்ளெக்ஸ் திரையரங்கத்தை தற்போது ஈரோட்டிற்கு வருகிறது.


# வேலை வாய்ப்பு

## கனரா வங்கியில் 3,500 வேலைகள்!




கனரா வங்கிப் பணி
ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி
இந்தியா முழுவதும் இடங்கள்
விண்ணப்பம்: ஆன்லைனில்: https://www.canarabank.bank.in/
தொடக்கம்: 01.10.2026
கடைசி நாள்: 17.10.2026
தகுதி, விதிமுறைகளை அறிந்து விண்ணப்பிக்க: கனரா வங்கி அதிகாரப்பூர்வ இணையதளம்–: https://www.canarabank.bank.in/


# ரூ. 100 கோடி மோசடி வழக்கு: அமலாக்கத் துறை விசாரணை!



சென்னை, அக். 01–

தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்க ரூ.100 கோடிக்கு மேல் வசூலித்து மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் அமலாக்கத் துறை விசாரணையை தொடங்கியுள்ளது.

சட்டவிரோதமாக நடைபெற்ற பரிவர்த்தனைகள் குறித்த ஆய்வு செய்து வரும் அமலாக்கத் துறை, சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசாரிடமும் ஆவணங்களை பெற்று ஆய்வு செய்து வருகிறது. மேலும், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ், அரசகுமார் தொடர்புடைய இடங்களில் சோதனை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சிவாஜி கணேசன் நூற்றாண்டு விழா! தம்பி விஜய் அரசு மீது நம்பிக்கை - பிரபு!



சென்னை, அக். 01–

சிவாஜி கணேசனின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை தமிழக அரசு சிறப்பாக கொண்டாடும் என்ற நம்பிக்கை உள்ளதாக நடிகர் பிரபு தெரிவித்தார்.

சிவாஜி கணேசனின் பிறந்தநாளையொட்டி சென்னை அடையாறு மணிமண்டபத்தில் உள்ள அவரின் சிலைக்கு தமிழக அரசு சார்பில் மரியதை செலுத்தப்பட்டது. தமிழக அரசு சார்பில் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், அமைச்சர்கள் ராஜ்மோகன், வெங்கடரமணன் ஆகியோர் சிவாஜி கணேசன் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதுமட்டுமின்றி, இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் எம்.எல்.ஏ.வும் அமைச்சருமான வன்னி அரசு, நடிகர் பிரபு, நடிகர் நாசர், விக்ரம் பிரபு மற்றும் சிவாஜி கணேசன் குடும்பத்தினர் எனப் பலர் பங்கேற்றனர். "நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் அப்பாவின் (சிவாஜி கணேசன்) ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் இன்று இங்கு வந்துவிடுகிறார்கள். அவர்களின் அன்புக்கு நன்றி. இங்கு வந்து தமிழக அரசு சார்பில் மரியாதை செலுத்திய அமைச்சர்கள், ரசிகர் மன்றத்தினருக்கு நன்றி. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட காவலர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

99 ஆவது பிறந்தநாளில் இருந்தே நூற்றாண்டு பிறந்த நாள் கொண்டாட்டத்தை ஆரம்பித்துவிடுவோம் என முதல்வர் விஜய் உறுதி அளித்துள்ளார். இதனை தமிழக அரசு சிறப்பாக செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது'' எனக் குறிப்பிட்டார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881






## இன்றைய கார்ட்டூன்




## அனைவருக்குமான முதல்வராக உயரும் ஜோசப் விஜய்!

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற ச. ஜோசப் விஜய் முதல் முறையாக கடந்த 28–ஆம் தேதி மதுரைக்கு வந்தார். தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத் தொடக்க விழா நடைபெற்ற மதுரை அரசுராஜாஜிமருத்துவமனையின் சுற்றுப் பகுதிகளில் இரு நாள்களுக்கு முன்பாகவே காவல் துறையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினர். தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக வந்த அவரை வரவேற்க விரகனூர் சந்திப்பு, குருவிக்காரன் சாலை, அரசு ராஜாஜி மருத்துவமனை அமைந்துள்ள பனகல் சாலை உள்பட அவரது பயணப் பாதைப் பகுதிகளில் செப். 26–ஆம் தேதியன்றே பதாகைகள் அமைக்கப்பட்டன. ஆங்காங்கே உயரமான கம்பங்கள் நடப்பட்டு, அவற்றில் தவெக கொடிகள் கட்டப்பட்டன.



இந்த முன்னேற்பாடுகள் காரணமாக, மதுரை விமான நிலையம் முதல் அரசு ராஜாஜி மருத்துவமனை வரையிலான பகுதிகளில் முதல்வரை வரவேற்க சாலையின் இருபுறங்களிலும் நூற்றுக்கணக்கான விளம்பரப் பதாகைகள் அமைக்கப்படும்; வழிநெடுகிலும் இருபுறங்களிலும் தவெக கொடிகள் பறக்கும்; போக்குவரத்து பாதிக்கப்படும்; மதுரை அரசு மருத்துவமனையில் மக்களுக்கான மருத்துவ சேவை ஓரிரு நாள்கள் தடைபடும் என்ற அச்சம் மதுரை மக்களிடம் பரவலாக இருந்தது.

ஆனால், தமிழக முதல்வர் ஜோசப் விஜய் திங்கள்கிழமை (செப். 28) மதுரைக்கு வந்தபோது, அவர் சாலை வலம் மேற்கொண்ட மதுரை விமான நிலையம் முதல் அரசு ராஜாஜி மருத்துவமனை வரையிலான 14 கி.மீ. தொலைவில் ஒரு வரவேற்புப் பதாகைகூட இல்லை. இதேபோல, ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த உயரமான கொடிக் கம்பங்களும் இல்லை. மேலும், முதல்வரின் வருகைக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு வரையிலும் ராஜாஜி அரசு மருத்துவமனை அமைந்துள்ள பனகல் சாலையின் பொதுப் போக்குவரத்துக்கு எந்தவிதத் தடையும் விதிக்கப்படவில்லை. மருத்துவமனையில் பொதுமக்கள் மருத்துவ சேவைக்கும் நீண்ட நேரம் தடை ஏற்படவில்லை.

தனது வருகையால் பொதுப் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் எந்தவித இடையூறும் ஏற்படக் கூடாது என முதல்வர் ச. ஜோசப் தெரிவித்த ஒற்றை அறிவுறுத்தலே இத்தனைக்கும் காரணம் எனக் கூறப்படுகிறது. இந்த உத்தரவின் காரணமாகவே, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த வரவேற்புப் பதாகைகள், கட்சிக் கொடிகள் செப். 27–ஆம் தேதி இரவோடு இரவாக அகற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

முந்தைய காலங்களில் முதல்வர்களின் வருகையின்போது பொதுவெளிகளை ஆக்கிரமித்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக அமைக்கப்படும் பிரம்மாண்ட பதாகைகள், கொடிகள் இல்லாமல், மதுரையில் ஏறத்தாழ 28 கி. மீ. தொலைவு சாலை வலத்தை முதல்வர் ஜோசப் விஜய் மேற்கொண்டது பொதுமக்களிடையே மகிழ்ச்சியையும், மதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம், முதல்வர் ஜோசப் விஜய் மதுரை மக்களின் மனதில் தன்னை உண்மையான "ஜனநாயகனாக' பதிவு செய்துவிட்டார் என்பது அரசியல் பார்வையாளர்களின் கருத்து.

தவெக அரசு அமைந்த பிறகு நடைபெற்ற மிகப் பெரிய கோயில் குடமுழுக்கு விழா மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் குடமுழுக்கு. இந்த விழாவில் முதல்வர் பங்கேற்க வேண்டும் என பல தரப்பினர் அழைப்புவிடுத்தும் அவர் பங்கேற்கவில்லை. இந்த விழாவைப் பொருத்தவரை சித்திரை வீதியில் பக்தர்களை அனுமதிக்கவில்லை என்பது பரவலாக விமர்சனம் என்பதை மறுப்பதிற்கில்லை. ஆயிரம் வருத்தங்கள், மனக்கசப்புகள் இருந்தாலும், பல்லாயிரக்கணக்கானோர் கூடிய இந்த விழாவில் எந்தவித அசம்பாவிதத்துக்கும் இடமளிக்காதது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கு முன்பாக தவெக தலைவராக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குச் சென்ற அவர், அங்கு வேல் காணிக்கை செலுத்தி வழிபட்டார். இருப்பினும், அதன் பிறகு திருப்பரங்குன்றம் விவகாரத்தில் முந்தைய அரசின் நிலைப்பாட்டையே தவெக அரசும் பின்பற்றியது. இதனால், முதல்வர் ஜோசப் விஜய் தன்னை சிறுபான்மையினரின் முகமாகவே அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புகிறார் எனக் கருதப்பட்டது.

இதன் காரணமாக, கடந்த 28–ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற அரசு விழாவுக்கு வந்தபோது, மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கு செல்வாரா? என்பது எதிர்பார்ப்புக்குரியதாக இருந்தது. இந்தக் கோயிலில் மாற்று மதத்தினர் சுவாமி தரிசனம் செய்ய வேண்டுமெனில் இந்து மத வழிபாட்டில் தனக்கு நம்பிக்கை உள்ளது என எழுத்துபூர்வமாக உறுதி அளிக்க வேண்டியது அவசியம். இந்த உறுதியை முதல்வர் அளிப்பாரா என்பதே எதிர்பார்ப்புக்கு முக்கியக் காரணமாக இருந்தது. இந்த நிலையில், செப். 28–ஆம் தேதி மாலை முதல்வர் ச. ஜோசப் விஜய் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குச் சென்றார். முதல்வர் விஜய்யும், அவரது தனிப் பாதுகாவலர் நயீம்முசாவும் தங்களுக்கு இந்து மத வழிபாட்டில் நம்பிக்கை உள்ளதாக எழுத்துபூர்வமாக உறுதி அளித்தனர் என்பதை கோயில் நிர்வாகம் உறுதிப்படுத்துகிறது. எந்த விதத்திலும் ஆலய விதிமுறைகளை தான் மீற விரும்பவில்லை என்று முதல்வர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

கோயில் வாசலில் பூர்ணகும்ப மரியாதை வரவேற்பின்போது அளிக்கப்பட்ட விபூதி, குங்குமத்தை நெற்றியில் தரித்துக் கொண்டு அம்மன் சந்நிதி, சுவாமி சந்நிதிகளில் முதல்வர் தரிசனம் செய்தார். தரிசனம் முடிந்து விமான நிலையத்துக்கு சாலை வலமாகப் புறப்பட்ட முதல்வர் நெற்றியில் தரித்த விபூதி, குங்குமத்துடனேயே தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

இதன்மூலம், சிறுபான்மையினரின் வாக்குகளைக் கவருவதற்காக, கோயிலிலிருந்து வெளியே வந்ததும் தான் தரித்திருந்த விபூதி, குங்குமத்தைக் கலைத்துவிடுவார் என்ற ஊகங்களைப் பொய்யாக்கி, சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என அனைவருக்குமான முதல்வராக ஜோசப் விஜய் தனது அடையாளத்தை உறுதி செய்துவிட்டார் என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இதேபோல, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் குடமுழுக்கு விழா அழைப்பிதழில் அறங்காவலர் குழுத் தலைவர், உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெறாததும், தனது தாய் ருக்மணி பழனிவேல் ராஜனை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு கோயில் நிர்வாகம் வற்புறுத்துவதாகவும் முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்ததும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்தநிலையில், கடந்த திங்கள்கிழமை கோயிலுக்கு வந்த முதல்வர் ஜோசப் விஜய்யை அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல் ராஜன் பொன்னாடை அளித்து வரவேற்றார்.

அப்போது, உடனிருந்த அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், ருக்மணி பழனிவேல் ராஜன் முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனின் தாய் என்பதை முதல்வரிடம் தெரிவித்தார். உடனே ருக்மணி பழனிவேல் ராஜனிடம் நலம் விசாரித்ததுடன், பணிந்து ஆசியும் பெற்றார் முதல்வர் விஜய். முதல்வரின் இந்த நாகரிக நடைமுறை, அவரை விமர்சித்தவர்களுக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

தன்னை அனைவருக்குமான முதல்வராகவும், உண்மையான ஜனநாயகனாகவும் நிலைநிறுத்திக் கொள்ளும் முனைப்பில் முதல்வர் ச.ஜோசப் விஜய் வெற்றியடைந்திருப்பதற்கான அடையாளமாக அவரது மதுரை விஜயம் பார்க்கப்படுகிறது.

## முதல்-அமைச்சர் விஜய்க்கு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் பாராட்டு!



புதுடெல்லி, அக். 01–

கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள தனியார் முடிதிருத்தும் நிலையத்தின் தரவுகளை திருடியதாக கிஷோர் குமார் என்பவர் மீது மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை எதிர்த்து கிஷோர் குமார் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் சஞ்சய்குமார், சஞ்சய் சச்தேவா அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது அரசு தரப்பு வக்கீல் கருணாகரன் ஆஜராகி, 'நான் இதற்குமுன்பு புகார்தாரர் தரப்பில் ஆஜராகி வாதிட்டேன். எனவே இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் கவுதமன் ஆஜராவார்' என்றார். இதனையடுத்து கவுதமன், காலஅவகாசம் கோரினார்.

அப்போது நீதிபதி சஞ்சய்குமார். 'இந்த வழக்கில் உங்களுக்குள் முடிவுக்கு வரவில்லை. ஆனால் தமிழகத்தில் சில விஷயங்கள் இன்னும் சீரடைய வேண்டி இருந்தாலும் உங்கள் முதல்–அமைச்சர் (விஜய்) சிறப்பாக செயல்படுகிறார். அவரை பற்றி எங்களுக்கு நல்ல தகவல்கள் கிடைத்துள்ளன. தமிழகத்திற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்' என்று தெரிவித்தார். இந்த கருத்தை நீதிபதி சஞ்சய் சச்தேவா ஆமோதித்தார்.

## ஜல்லி, எம்–சாண்ட் ஏற்ற தடை!



சென்னை, அக். 02–

'ஜி.பி.எஸ். பொருத்தாத லாரிகளில் ஜல்லி, எம்–சாண்ட் ஏற்றிச்செல்ல அனுமதி இல்லை' என்று கனிம வளத்துறை உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள கனிம வளங்கள் வெளி மாநிலங்களுக்கு கடத்தப்பட்டு வருவதாக புகார் எழுந்தது. அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடக, தெலுங்கானாவிற்கு கடத்தப்பட்டு வந்தது. அனுமதி இல்லாத லாரிகள் மூலம் தமிழகத்திற்கு உள்ளேயும் கனிம வளங்கள் சுரண்டப்பட்டன. இதனை தடுக்க தமிழக அரசு புதிய திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

கனிம வளங்கள் ஏற்றி செல்லும் லாரிகளில் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதற்கான அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால் பெரும்பாலான லாரிகளில் இன்னும் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்படவில்லை. அதனால் அந்த லாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதுகுறித்து கனிம வளத்துறை இணை–இயக்குனர் ஆறுமுக நயினார் கூறியதாவது:–

கனிம வளங்கள் முறைகேடாக கடத்தப்படுவதை தடுக்க லாரிகளில் ஜி.பி.எஸ். கருவி பொருத்த லாரி உரிமையாளர்களுக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டது. நேற்றுடன் அந்த கால அவகாசம் நிறைவுபெற்றது. தமிழகத்தில் 1 லட்சத்து 40 ஆயிரம் லாரிகள் கனிம வளம் ஏற்றுவதற்கு விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளன. ஆனால் இதுவரையில் 24 ஆயிரம் லாரிகளில் மட்டுமே ஜி.பி. எஸ். பொருத்தப்பட்டு உள்ளது.

மீதமுள்ள லாரிகளில் உடனடியாக பொருத்தப்பட வேண்டும். இல்லையென்றால் அதனுடைய அனுமதி சீட்டு (டிரிப் ஷீட்) ரத்து செய்யப்படும். அனுமதி இல்லாமல் இனிமேல் கனிம வளங்களை லாரியில் எடுத்துச் செல்ல முடியாது. ஜி.பி. எஸ். கருவிப் பொருத்திய லாரிகளில் மட்டுமே கனிம வளங்கள் இனி ஏற்ற முடியும்.

மற்ற எந்த லாரிகளிலும் கருங்கற்களோ, எம்–சாண்ட், மணல் போன்றவற்றை எடுத்துச் செல்ல முடியாது. அதையும் மீறி கனம வளங்கள் கடத்துவது பற்றி பொதுமக்கள் புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு மணல் லாரிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் யுவராஜ் கூறும்போது. 'கனிம வளங்கள் கொள்ளை அடிப்பதை தடுப்பதற்கு அரசு எடுக்கும் அனைத்து முயற்சிக்கும் உறுதுணையாக இருப்போம். ஜி.பி.எஸ். பொருத்தாத லாரிகளிலும் பொருத்த அறிவுரை கூறப்பட்டு, அதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. நீதிமன்ற உத்தரவை ஏற்று குவாரிகளிலும் கேமராக்கள் பொருத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

## இ-கேஒய்சி செய்யப்படாத குடும்ப அட்டைகள் முடக்கப்படாது: தமிழக அரசு!



சென்னை, அக். 01–

தமிழகத்தில் இ–கேஒய்சி செய்யப்படாத குடும்ப அட்டைகள் முடக்கப்படாது என்று தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அஜய் யாதவ் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

எந்தவொரு குடும்ப அட்டைதாரருக்கும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்குவதை நிறுத்தவோ, தடை செய்யவோ கூடாது என அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள், உதவி ஆணையர்களுக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

6 மாதங்களுக்கு மேல் நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் வாங்காத முன்னுரிமை (பிஹெச்ஹெச்) மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா (ஏஏஒய்) குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருள்கள் வழங்குவதை வியாழக்கிழமை (அக். 1) முதல் தற்காலிகமாக தடை செய்து உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முன்னுரிமை குடும்ப அட்டை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்களின் இ–கேஒய்சி சதவீதம் 96.69 ஆகும். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் கடந்த மே 10, ஆக. 2, ஆக. 8, 9, 19, 26, 29 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த முகாம்கள் மூலமாக, ஜூலையில் 95.44 சதவீதமாக இருந்த இ–கேஒய்சி சரிபார்ப்பு, புதன்கிழமை 96.69 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த சிறப்பு முகாம்களின் மூலமாக 4,49,663 முன்னுரிமை மற்றும் ஏஏஒய் திட்ட குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இருப்பினும், இ–கேஒய்சி பணியை மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள், நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் வாங்க செல்லும்போது, விரல்ரேகை / கண்கருவிழி சரிபார்ப்பின் மூலம் தங்களது இ–கேஒய்சி தகவல்களை விரைந்து பதிவேற்றம் செய்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆர்ப்பாட்டம்!




சென்னை, அக். 01–

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி சென்னையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) விவகாரத்தில், தேர்தல் ஆணையத்தின் மற்ற இரு தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் 14 முறை எதிர்ப்பு தெரிவித்த போதிலும், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனித்து செயல்பட்டதாக புகார் எழுந்துள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துடன், ஞானேஷ் குமார் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி எதிர்க்கட்சிகள் பலவும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் அருகே இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் ஆகிய கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் என். குணசேகரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் இதில் கலந்து கொண்டனர்.

எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் கோடிக்கணக்கான வாக்காளர்களை நீக்கி வாக்குத் திருட்டு நடைபெற்றுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020